செ.வெ.எண்: 845/2016 நாள்: 29.11.2016

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து பிரிவு கிறிஸ்தவர்களில் 2016-17 ஆம் ஆண்டிற்கு ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள விருப்பம் உள்ள விண்ணப்பத்தாரர்கள் 01.01.2017 தேதியில் ஓராண்டுக்கு செல்லத்தக்க பாஸ்போர்ட் உடையவராகவும், வெளிநாடு பயணம் மேற்கொள்வதற்கு எவ்விதமான வில்லங்களும் இல்லாதவராகவும், ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் ஜெருசலேம் பயணம் மேற்கொள்ளாதவர்களாகவும், வெளிநாடுகளில் புனித பயணம் மேற்கொள்வதற்கு மருத்துவ மற்றும் உடற்தகுதி பெற்றவராகவும் இப்பயணம் மேற்கொள்வதற்காக ஏற்படும் செலவினத்தில் அரசு வழங்கும் நிதி உதவி ரூ.20,000 நீங்கலாக மீதம் உள்ள தொகை செலுத்த ஒப்புதல் அளிப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் விண்ணப்பதாரரையும் சேர்த்து அதிகபட்சம் நான்கு நபர்கள் பயணம் மேற்கொள்ளலாம். இப்பயணத்தில் 70 வயது நிறைவடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன் அவருக்கு துணையாக அவர் விரும்பும் ஒரு நபரை மேற்படி நிபந்தனைகளுக்குட்படும் பட்சத்தில் அவருடன் பயணம் செய்ய அனுமதிக்கப்படும். பயனாளிகள் மாவட்ட வாரியாக கிறிஸ்தவ மக்கள் தொகையின் அடிப்படையில் கணினி மூலம் குலுக்கள் முறையில் கூர்ந்தாய்வுக்குழுவினரால் தெரிவு செய்யப்படுவர். ஜெருசலேம் புனித பயணம் மேற்கொள்ள விருப்பம் உள்ள விண்ணப்பத்தாரர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களையும் கூடுதல் விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம